# Prize Distribution and launching of website (www.tnsmallsavings.org) by Hon'ble Deputy Chief Minister of Tamil Nadu on 19-2-2018 at Secretariat, Chennai



- தினத்தந்தி, உயிர்த்துடிப்பு உள்ள நாளிதழ் -

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

சென்னை (20-2-2018)
செவ்வாய்க்கிழமை
மலர் 76
இதழ் 111
ஹேவிளம்பி ஆ மாசி மீ
ஹிஜ்ரி 1439 ஜமாதுல் ஆகி

உலக சிக்கன நாள் விழா போட்டிகளில்

## வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்கு பரிசுகள்

### ஓ.பன்னீர்செல்வம் வழங்கினார்

சென்னை, பிப்.20-

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது-

சென்னை தலைமைச்செயலகத்தில் துணை முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், 2016-2017 ஆண்டில், உலக சிக்கன நாள் விழாவில் கலந்து கொண்டு கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, குழு நடனப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினார். மேலும் மாநில அளவில் தமிழ்நாடு சிறுசேமிப்பு வசூலில் முதன்மைபெற்ற நிலைமுகவர்கள், மகளிர் முகவர்கள், குழு முகவர்கள் ஆகியோருக்கும் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்.

இதுதவிர, தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத் துறையின் மேம்படுத்தப்பட்ட www.tnSmallSavings.org என்ற புதிய இணையதளத்தையும் தமிழ்நாடு துணை முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தொடங்கிவைத்தார்.

இந்த இணையதளத்தில் '50 ஆண்டுகளுக்கு முன்னால்' என்ற தலைப்பில், மறைந்த முதல்-அமைச்சர் எம்.ஜி.ஆர். சிறுசேமிப்புத்துறை துணை தலைவராக இருந்த போது 25.2.1968 அன்று நடைபெற்ற சிறுசேமிப்புத்துறை கலைநிகழ்ச்சி குறித்து அந்நாளில் பத்திரிகைகளில் வெளிவந்த அரிய புகைப்படத்தொகுப்பு இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியின் போது, நிதித்துறை செயலாளர் க.சண்முகம், சிறுசேமிப்புத் துறை ஆணையர் (பொறுப்பு) பி.உமாநாத் மற்றும் சிறுசேமிப்புத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



முரசு: 57
ஒலி: 140
MALAI MURASU
8 பக்கம் 500 காசு
REGN.NO.TN/CH(C)/291/15-17
(TN PMGCCR) WPP NO.490/15-17
RNI Regn.No. 5843/61

மாலை முரசு
சென்னைப் பதிப்பு
www.malaimurasu.co
வீழ்வது யாராயினும் வாழ்வது தமிழாகட்டும்
செவ்வாய்க்கிழமை 20-02-2018 (மாசி 8)
★★★

சென்னை தலைமைச் செயலகத்தில் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் உலக சிக்கன நாள் விழாவில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு மற்றும் மாநில அளவில் தமிழ்நாடு சிறுசேமிப்பு வசூலில் முதன்மை பெற்ற முகவர்களுக்கு சான்றிதழ்கள், பரிசுகள் ஆகியவற்றை வழங்கி சிறப்பித்தார்கள். உடன் கூடுதல் தலைமைச் செயலாளர் நிதித்துறை செயலாளர் க.சண்முகம் மற்றும் சிறுசேமிப்புத்துறை ஆணையர் (பொ) டாக்டர் பி.உமாநாத் உள்ளனர்.

**( PRESS CUTTINGS )**